# திருநெல்வேலி மாநகராட்சி

## 28.10.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

1) அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 24.06.2022ல் உள்ளாட்சி அமைப்புகளில் நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தவும், நகர்ப்புற உள்ளாட்சி செயல்பாடுகளில் பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் திட்டம், வளர்ச்சிப்பணிகள் செயல்படுத்தவும், வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும், அதன் செயல்பாடுகளுக்கும் The Tamilnadu Urban Local Bodies (Ward Committee and Area Sabha} Rules-2022 ஏற்படுத்தப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட விதிகளில் உள்ளாட்சி அமைப்புகளில் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு வார்டு குழு அமைத்து அந்த வார்டில் வாக்குரிமை பெற்ற ஒவ்வொரு வார்டு பகுதியில் ஒரு நபரை வார்டு குழு உறுப்பினர்களாக மாமன்றம் மூலம் பரிந்துரை செய்து நியமனம் செய்திடவும், அந்தந்த வார்டு மாமன்ற உறுப்பினர் அந்த வார்டு குழு தலைவராக செயல்படுவதற்கும், மேலும் வார்டின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பகுதி சபா அமைத்து அந்த சபாவிற்கு மேறகண்டவாறு பரிந்துரை செய்யப்பட்ட நபர் பகுதி சபா உறுப்பினராக செயல்படுவதற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் வார்டு குழு மற்றும் பகுதி சபா கூட்டமானது அந்தந்த வார்டு மாமன்ற உறுப்பினர் தலைமையேற்று மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். கூட்டமானது தலைவரால் நடத்தப்படாமல் இருந்தால் மாநகராட்சி ஆணையர் அவர்களால் வார்டு குழு மற்றும் பகுதி சபா கூட்டம் கூட்டப்படுவதற்கும் விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் விதிகளின்படி பகுதி சபா அமைப்பதற்கு மாநகராட்சி வார்டு பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வார்டையும் பகுதிகளாக பிரித்து வார்டில் உள்ள பகுதிகளின் எல்லைகளை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, ஐந்து இலட்சம் வரையிலான மக்கள் தொகை உள்ள மாநகராட்சிகளில் ஒவ்வொரு வார்டிலும், பகுதிகளின் எண்ணிக்கை 4 முதல் 5 வரை என நிர்ணயித்து பகுதி சபா அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வார்டு குழு மற்றும் பகுதி சபா கூட்டத்தினை மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டுவதற்கும் திட்டப்பணிகள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் குறித்த அஜெண்டா தயார் செய்ய ஏதுவாக கூட்டச் செயலாளர் ஒருவரை உதவியாளர் நிலையில் நியமித்திடவும் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை அரசாணை(நிலை) எண் 93, நாள் 24.06.2022ல் ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் விதிகளின்படி திருநெல்வேலி மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு வார்டிற்கும் பகுதிகளின் எண்ணிக்கை 4 முதல் 5 என கணக்கீட்டு, பகுதி சபா உறுப்பினர்களை நியமனம் செய்திட ஏதுவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு பிரிக்கப்பட்டுள்ள வார்டு பகுதிகளின்படி பகுதி சபா அமைப்பதற்கும், அதன் எண்ணிக்கையினை அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இது தொடர்பாக வரப்பெற்ற அரசாணை மற்றும் மாநில அரசிதழ் அறிவிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. The Tamilnadu Urban Local Bodies (Ward Committee and Area Sabha ) Rules - 2022 தொடர்பான அரசாணைகள் மற்றும் மாநில அரசிதழ் அறிவிக்கையினை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இணைக்கப்பட்ட பட்டியலில் கண்டுள்ளவாறு ஒவ்வொரு வார்டு பகுதியிலும் பகுதி சபா அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள பட்டியலை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.
3. ஒவ்வொரு வார்டின் பகுதிகளுக்கும் உறுப்பினர்கள் நியமனத்திற்கான பட்டியலை மாமன்றம் அளிக்கலாம்.

ந.க.எண் : சி1/ 6592 /22

**தீர்மானம் எண்:177 அலுவலகக்குறிப்பு வ.எ.1 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**வ.எ. 2) மற்றும் 3) அங்கீகரிக்கப்பட்டது.**